[1971 டிசம்பர் 4

ஒட்டப்பிடாரத்துக்கு வேளாண்மைப் பண்ணை

* 89 வினு—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் ஒரு விவசாயப் பண்ணை அமைக்க நடத்தப்பட்ட ஆராய்ச்சிக்காக செய்யப்பட்ட செலவு எவ்வளவு?

(இ) அச்செலவு, மாநில அரசைச் சேர்ந்ததா, அல்லது மத்திய அரசைச் சேர்ந்ததா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ரூபாய் 34,568-20 (ரூபாய் முப்பத்து நாலாயிரத்து ஐநூற்று அறுபத்தெட்டு, பைசா இருபது) செலவாகி இருக்கிறது.

(இ) புது டில்லி அரசுப் பண்ணை நிறுவனம் கோரியபடி நடத்தின நீர்வள ஆராய்ச்சிக்காக ஏற்பட்ட செலவை அந்நிறுவனம் ஏற்றுக் கொள்ள இசையவில்லை. எனவே, அந்தச் செலவை மாநில அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிலை ஏற்பட்டுள்ளது.

அரூருக்கு வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்

* 90 வினு—டாக்டர் ச. அ. சின்னராசு : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:—

தருமபுரி மாவட்டத்தில் துவங்க இருக்கும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தை அரூரில் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அண்மையில், தர்மபுரி மாவட்டத்தில் ஒரு மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஆராய்ச்சி நிலையத்தை அமைக்கத் தகுதியான இடம் இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

திருப்பூர் நகராட்சியில் சலவைத் துறை

* 91 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருப்பூர் தொகுதிச் சட்டப் பேரவை உறுப்பினரிடமிருந்து திருப்பூர் நகராட்சிக்கு "டோபிகானு" கட்ட நிதி கேட்டு விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

1971 டிசம்பர் 4]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) இந்நிதியாண்டில் திருப்பூர் நகராட்சியில் "சலவைத் துறை" கட்ட குறைந்தது 1 லட்சம் ரூபாய் ஒதுக்குமாறு கேட்டுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் இப்பொழுது முடிவுறுகிறது. ஆனால் இன்னும் சில கேள்விகள் பதிலளிக்கப் படாமல் இருக்கின்றன. இந்தக் கேள்விகளை இன்றைக்கு எடுத்து முடித்துவிடலாமா அல்லது மறு நாளைக்கு ஒற்றி வைக்கலாமா என்பதிலே அவையினுடைய கருத்தை அறிய விரும்புகிறேன். (சிறிது நேரத்திற்குப் பிறகு) கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: கேள்விகள் கொடுத்து எவ்வளவோ நாட்கள் காத்திருந்து அவையின் முன்னால் பதில் அளிக்கும்போது ஒரு உபகேள்வி கூட கேட்க வாய்ப்புக் கொடுக்காமல் இருப்பது வருந்தத்தக்க விஷயம். அதற்கு பதிலாகக் கேள்விகளை ஒத்தி போடுவது நல்ல முறை. அவையில் சமயம் இல்லையென்றால் இன்னொரு நாள் இந்தக் கேள்விகளை எடுத்துக்கொண்டு உறுப் பினர்கள் உப கேள்விகள் கேட்பதற்கு வாய்ப்புக் கொடுப்பது தான் 'டெமாக்ரடிக் செட்அப்' பின் நிலையாக இருக்கும். ஆகவே, இன்று சமயம் இல்லையென்று கருதினால் தலைவர் அவர்கள் இந்தக் கேள்விகளை இன்னொரு தினத்திற்கு மாற்றித் தொடருவது நல்லது என்று கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சாதாரணமாகக் கேள்வி களுக்குப் பதில் அளிக்கும்போது சட்டசபையின் மரபு—பாராளு மன்றத்திலும் பின்பற்றுவது—அந்தக் கேள்விக்களுக்கான விவரமான பதில்களை அச்சடித்து அவையின்முன் வைத்து விடுவதுதான். ஒரு மணி நேரத்தில் ஆறு அல்லது ஏழு கேள்விகளை எடுத்துக்கொண்டு ஏராளமான துணைக் கேள்விகளை அனுமதித்துவிட்டு மற்றக் கேள்விகளை அச்சடித்துக் கொடுத்து விடுகின்ற மரபைக் கையாளலாமா? திரு. தங்கமணி அவர்கள் பாராளுமன்றத்திலே இருந்திருக்கிறார்கள். அங்கேயெல்லாம் அதைத்தான் செய்கிறார்கள். அந்த மாதிரியான மரபைக் கடைப் பிடிக்கலாம் என்று நம்முடைய அவை முடிவுக்கு வந்தால்கூட அது சட்டப் பேரவை தலைவருக்கு மகிழ்ச்சியான ஒன்றாகத்தான் இருக்கும்.

அடுத்து கேள்வி எண் 92. . .

Lac Industry in Denkanikota area

* 92 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to revive the lac industry in Denkanikota area; and

(*b*) if so, the details thereof?